Ours bank with
Bank of Baroda

# மதுரை மணி

Madurai Mani Tamil Evening Daily
தினசரி தமிழ் நாளிதழ் ®
ISO 9001:2015 / ISO 14001:2015: தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனம்

New College House
(A Heritage Hotel)
2342971 (3 Lines)
4372900 (4 Lines)
99526 02900
95669 84900
College House
2, Town Hall Road,
Madurai-625 001.

மதுரை பதிப்பு | *மணி 55 | * ஓசை 99 | உள்ளூர் - 09.04.2026 | வியாழன் | விலை ரூ.4/- | பக்கங்கள்-4 | Website : http://maduraimaninews.com
Madurai Edition | *Vol 55 | * Issue 99 | வெளியூர் - 10.04.2026 | வெள்ளி | Price Rs. 4/- | Pages -4 | Email: maduraimaninews@gmail.com

தேர்வு இல்லாமல் இந்திய கடற்படையில் வேலை..!
உங்கள் திருமணம் எப்படி? ஜாதகம் கூறும் தகவல்கள்!
விறு விறு ஓட்டு — புதுவை, அசாம், கேரளம்!
அனல் பறக்கும் தேர்தல் செய்திகள்!

# 3 மாநிலங்களில் சட்டசபை தேர்தல்: இளைய தலைமுறையினருக்கு பிரதமர் மோடி கோரிக்கை!



புதுடெல்லி, ஏப். 09–

3 மாநிலங்களில் சட்டசபை தேர்தல் நடைபெற்று வரும்நிலையில், இளைய தலைமுறையினருக்கு பிரதமர் மோடி கோரிக்கை விடுத்துள்ளார். இதுதொடர்பாக அவர் தனது எக்ஸ்வலைதளத்தில் கூறியிருப்பதாவது:– புதுச்சேரியில் சட்டசபை தேர்தல் நடைபெறும் நிலையில், வாக்காளர்கள் அனைவரும் பெருந்திரளாக வந்து தங்கள் வாக்குகளை செலுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, நமது இளைஞர்களுக்கும், பெண் வாக்காளர்களுக்கும் ஜனநாயக நடைமுறையை வலுப்படுத்துமாறு நான் கோரிக்கை விடுக்கிறேன். புதுச்சேரியின் எதிர்காலத்தை வடிவமைக்க ஒவ்வொரு வாக்கும் முக்கியத்துவம் வாய்ந்தது.

2026 அசாம் சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு தொடங்கியுள்ள நிலையில், அசாம் மக்கள் பெருமளவில் தங்களது வாக்குரிமையைப் பயன்படுத்த வேண்டும் என நான் கேட்டுக்கொள்கிறேன். மாநிலத்தின் இளைஞர்களும் பெண் வாக்காளர்களும் ஆர்வத்துடன் பங்கேற்று, இந்தத் தேர்தலை ஜனநாயகம் மற்றும் பொதுக் கடமையின் கொண்டாட்டமாக மாற்றுவார்கள் என நம்புகிறேன்.

2026 சட்டசபை தேர்தலில் பெருந்திரளான வாக்குப்பதிவு நடைபெறுவதை உறுதிசெய்யுமாறு கேரள மக்களை நான் கேட்டுக்கொள்கிறேன். சாதனை அளவிலான வாக்குப்பதிவு, கேரளாவின் ஜனநாயக உணர்விற்கு புத்துணர்ச்சி அளிக்கும். குறிப்பாக, மாநிலத்தின் இளைஞர்களும் பெண்களும் முன்வந்து வாக்களிக்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மத்திய அரசு நாடாளுமன்றத்தின் அடிப்படை அமைப்பையே திட்டமிட்டுச் சீர்குலைக்கிறது - மு.க.ஸ்டாலின்!

சென்னை, ஏப். 09–

முதல்–அமைச்சர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:–

பிரதமர் மோடி தலைமையிலான என்டிஏ அரசு நாடாளுமன்றத்தின் அடிப்படை அமைப்பையே திட்டமிட்டுச் சீர்குலைக்கிறது. விவாதங்களுக்கும் பொறுப்பில் இருப்பவர்கள் பதில்






கூறுவதற்குமான தளமாக இருக்க வேண்டிய நாடாளுமன்றமானது, உறுப்பினர்கள் தங்கள் தொகுதி, மாநில மக்களின் பிரச்சினைகளைப் பேசுவதற்குக் கூட போதிய நேரமளிக்காத வெற்றுச் சம்பிராதய அவையாகச் சுருக்கப்பட்டு வருகிறது.

தொகுதி மறுவரையறை என்ற பெயரில் தொகுதிகளின் எண்ணிக்கையை உயர்த்துவதற்கான முன்மொழிவு, “குறைந்தபட்ச அரசு, அதிகபட்ச நிர்வாகம்” என்ற அவர்களின் சொந்த முழக்கத்துக்கே எதிரானதாக அமைந்துள்ளது. இந்த முடிவினால் செலவுதான் கூடும், மக்களின் வரிப்பணம் வீணாகும், நாடாளுமன்றச் செயல்பாடுகளின் தரம் குறையும்.

மேலும், இந்தியாவை மாநிலங்களின் ஒன்றியமாக வரையறுக்கும் அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவு 1–க்கும் இது எதிரானது. மாநிலங்களின் குரலைப் புறக்கணித்துவிட்டு, முறையான கலந்தாலோசனையும் செய்யாமல் தவிர்த்துவிட்டுச் செயல்படுவது ஜனநாயகத்துக்கு எதிரானது. இது இந்தியாவின் பன்முக, கூட்டாட்சித் தன்மையைச் சிறுமைப்படுத்தும் ஒற்றைத்துவ எல்லைமீறலாகும்.

இதற்கெல்லாம் மேலாக, இந்தத் தொகுதி மறுசீரமைப்பு நடவடிக்கையானது பா.ஜ.க. ஆதிக்கம் செலுத்தும் வட மாநிலங்களுக்கு ஆதரவாக வலுவூட்டி, தென்மாநிலங்களின் குரலை நெரிக்கும். மூத்த தலைவர் சித்தராமையா சீற்றத்தோடு கூறியதுபோல, இது நடுநிலையான நடவடிக்கை அல்ல, இது அரசியல் நோக்கம் கொண்ட திட்டமிட்ட கட்டமைப்பு மாற்றம். வட மாநிலங்களின் தொகுதி எண்ணிக்கை இருமடங்காகும் அதேவேளையில் தென்மாநிலங்களின் அளவு 24 சதவீதத்திலேயே தேங்கி நிற்கிறது. இது மக்கள் தொகையைச் சிறப்பாகக் கட்டுப்படுத்தியதற்காகத் தமிழ்நாடு, கர்நாடகா, கேரளம் மற்றும் தெலங்கானா போன்ற மாநிலங்களைத் தண்டிப்பதாகும்.

இந்த நடவடிக்கையால் கூட்டாட்சி சிதைக்கப்பட்டு, அதிகாரம் ஒருசில பகுதிகளில் மட்டுமே குவிக்கப்படும் என்று சித்தராமையா, பினராயி விஜயன் மற்றும் ரேவந்த் ரெட்டி ஆகிய தென் மாநில முதல்–மந்திரிகள் மிகச்சரியாக எச்சரித்துள்ளனர்.

இது அவசரகதியில் தற்போது செய்யப்படுவதும் நம் அச்சத்தை அதிகமாக்குகிறது. பாரதூரமான தாக்கத்தை ஏற்படுத்தும் இத்தகைய முக்கிய நடவடிக்கையை மாநிலத் தேர்தல்களுக்கிடையே திணிக்க வேண்டிய அவசியம் என்ன? தேர்தல் சார்ந்த கதையாடல்களை வடிவமைக்கவும், பெண் வாக்காளர்களிடம் செல்வாக்கு பெறுவதற்காகவும் 2024 நாடாளுமன்ற மக்களைவைப் பொதுத்தேர்தலின்போது செய்த முந்தைய முயற்சிகளைப் போலவே இதுவும் அமைந்துள்ளது.

பெண்களுக்கான 33 சதவீத இட ஒதுக்கீட்டை நாங்கள் முழுமனதோடு ஆதரிக்கிறோம். அதில் மாற்றுக்கருத்துக்கே இடமில்லை. ஆனால், பொறுப்போடு செயல்பட்ட மாநிலங்களைத் தண்டிக்கும் வகையில் தொகுதி எண்ணிக்கையை அதிகரிக்காமலேயே, அதை நடைமுறைப்படுத்த வேண்டும் என்றுதான் நாங்கள் கோருகிறோம். அவர்களின் நோக்கம் உண்மையானதாக இருந்தால், இப்போதுள்ள தொகுதி அளவிலேயே மகளிருக்கான 33 சதவீத இட ஒதுக்கீட்டை வழங்குவதை எதுவும் தடுக்கவில்லையே?

இதர பிற்படுத்தப்பட்ட மக்களின் உரிமைக்கு ஆதரவான சமூகநீதிக் காவலர் என்று மத்திய அரசு தங்களை அழைத்துக்கொள்வதும் வெற்று முழக்கம்தான். ‘வளர்ந்த இந்தியா’ என ஒருபுறம் சொல்லிக்கொண்டே பல ஆண்டுகளாகக் கிரீமி லேயர் உச்சவரம்பை 8 லட்சம் ரூபாயில் இருந்து மாற்றாமல் வைத்திருந்து ஓ.பி.சி. மக்களுக்கு அவர்களுக்குரிய பங்கீடு கிடைக்காமல் வஞ்சித்தார்கள். இதர பிற்படுத்தப்பட்ட மகளிரின் பிரதிநிதித்துவத்துக்கான எந்தவித உத்தரவாதத்தையும் வழங்கவில்லை. 2027 மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் மூலம் முதல்முறையாக நாம் அறியவுள்ள சாதிவாரி எண்ணிக்கை முடிவுகளைக் கூட பரிசீலிக்காமல் அவசரமாக அவர்கள் செயல்படுவது இதில் அவர்களுக்கு உண்மையான அக்கறை இல்லை என்பதை அம்பலப்படுத்துகிறது. இது அதிகாரமளித்தல் அல்ல, புறக்கணிப்புக்கு மாறுவேடம் போட்டுச் சீர்திருத்தம் என்கிறார்கள்.

மேலும், தொகுதி மறுவரையறைக்கான அடிப்படையாகக் கொள்ளப்போவது எது என்பதிலும் கொஞ்சம் கூட வெளிப்படைத்தன்மை இல்லை. 2021 மக்கள்தொகைக் கணக்கெடுப்பின் அடிப்படையில் செய்யப் போகிறார்களா அல்லது மக்கள் தொகைக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளுக்கு முந்தைய காலமான 1971–ம் ஆண்டு எண்ணிக்கையின் அடிப்படையில் செய்யப் போகிறார்களா? மாற்றி மாற்றிப் பேசுவதும், வெற்று உத்தரவாதங்களும் நம் ஐயத்தை மேலும் அதிகரிக்கவே செய்கின்றன.

மொத்தத்தில் இந்த நடவடிக்கை மாநிலங்களின் மீது பெரும் நிதிச்சுமையை ஏற்றும், சட்டமன்றங்களை விரிவாக்கம் செய்ய அல்லது புதிதாகக் கட்டும் நிலைக்குத் தள்ளும். இவை அனைத்தும் முறையான கலந்தாலோசனை எதுவுமின்றி நடக்க இருக்கிறது. இது கூட்டுறவுக் கூட்டாட்சியியல் மீதான நேரடித் தாக்குதல் ஆகும்.


இவர்கள் செய்ய நினைப்பது சீர்திருத்தமே அல்ல, இது அதிகாரத்தை ஓரிடத்தில் குவித்து, நாடாளுமன்றத்தை பலவீனப்படுத்தி, தென்னகத்தை விளிம்புநிலைக்குத் தள்ளி, சமூகநீதியைச் சிறுமைப்படுத்துவதற்கான தன்னிச்சையான அரசியல் சதித் திட்டம்! ஏன் இந்த அவசியமற்ற அவசரம்? ஏன் மாற்றி மாற்றிப் பேசுகிறீர்கள்? இதனால் உண்மையாகப் பயனடையப் போவது யார்? எனும் கேள்விகளுக்கு நாட்டு மக்கள் முறையான விளக்கத்தைக் கோருகிறார்கள். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## மீண்டும் போர்?

# லெபனான் மீது 10 நிமிடத்தில் 100 ஏவுகணைகள்! அடங்க மறுக்கும் இஸ்ரேல்..

## ஹார்முஸ் ஜலசந்தி மீண்டும் மூடல்!!








லெபனான், ஏப்,. 09–

மத்திய கிழக்கில் நிலவி வரும் போர் பதற்றத்தில் ஒரு முக்கிய திருப்பமாக, லெபனான் மீது இஸ்ரேல் நடத்திய மிகக்கடுமையான வான்வழித் தாக்குதல்களைத் தொடர்ந்து, உலக நாடுகளின் மிக முக்கியமான எரிசக்தி வழித்தடமான ஹார்முஸ் ஜலசந்தியை (Strait of Hor–muz) ஈரான் மீண்டும் மூடியுள்ளது.

அமெரிக்கா மற்றும் ஈரானுக்கு இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் எட்டப்பட்ட 24 மணி நேரத்திற்குள்ளேயே இந்த அதிரடி நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது சர்வதேச அளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

### ஒப்பந்தத்தை மீறியதா இஸ்ரேல்?

அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் விதித்த காலக்கெடுவுக்கு சில நிமிடங்களுக்கு முன்னதாக, ஈரானுக்கும் அமெரிக்காவுக்கும் இடையே இரண்டு வார கால தற்காலிக போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தானது. ஆனால், இந்த ஒப்பந்தம் ஏற்பட்ட அடுத்த சில மணி நேரங்களிலேயே லெபனான் மீது இஸ்ரேல் சரமாரித் தாக்குதல்களை நடத்தியது.

இதற்கிடையே இஸ்ரேல் ராணுவம் லெபனான் மீது மிகப் பெரிய தாக்குதலை நடத்தியுள்ளது. வெறும் 10 நிமிட இடைவெளியில் 100க்கும் மேற்பட்ட டிரோன்கள் மற்றும் ஏவு கணைகள் தாக்கியுள்ளது. இந்த மிக மோசமான தாக்குதலில் குறைந்தது 254 பேர் கொல்லப்பட்டு, 1,100–க்கும் அதிகமானோர் காயமடைந்தனர். பலரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதால், பலி எண்ணிக்கை உயரக்கூடும் என அஞ்சப்படுகிறது. காணாமல் போனோர், இடிபாடுகளுக்குள் சிக்கியவர்களுக்கான தேடுதல் பணிகளும் தொடர்ந்து நடந்து வருகிறது.

தலைநகர் பெய்ரூட்டின் பல பகுதிகள் புகைய மண்டலமாகக் காட்சியளிக்கின்றன. இந்தத் தாக்குதல்களைத் தொடர்ந்தே, “இஸ்ரேல் போர் நிறுத்த விதிகளை மீறிவிட்டது” என்று குற்றம் சாட்டிய ஈரான், ஹார்முஸ் ஜலசந்தியை மீண்டும் மூடுவதாக அறிவித்தது.

### குழப்பத்தில் போர் நிறுத்த ஒப்பந்தம்

இந்த ஒப்பந்தத்தில் லெபனான் நாடு மற்றும் அங்குள்ள ஹிஸ்புல்லா அமைப்பு சேர்க்கப்பட்டுள்ளதா என்பதில் அமெரிக்கா மற்றும் ஈரான் இடையே பெரும் கருத்து முரண்பாடு நிலவுகிறது:

அதிபர் டொனால்ட் டிரம்ப் பேசுகையில், “ஹிஸ்புல்லா அமைப்பு ஒரு பயங்கரவாதக் குழு என்பதால் லெபனான் இந்த ஒப்பந்தத்தில் சேர்க்கப்படவில்லை. இஸ்ரேல் அங்கே நடத்துவது ஒரு தனிப்பட்ட சிறு போர் (Separate skir–mish)” என்று கூறியுள்ளார்.

இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு மற்றும் பாதுகாப்பு அமைச்சர் இஸ்ரேல் காட்ஸ் ஆகியோர், “ஈரானுடனான ஒப்பந்தம் ஹிஸ்புல்லாவுக்குப் பொருந்தாது; அவர்களை நாங்கள் தொடர்ந்து வேட்டையாடுவோம்” எனத் தெளிவுபடுத்தியுள்ளனர்.

ஈரானிய வெளியுறவு அமைச்சர் அப்பாஸ் அரக்சி இதனை வன்மையாக மறுத்துள்ளார். பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப்பின் பதிவைச் சுட்டிக்காட்டிய அவர், லெபனானும் இந்த ஒப்பந்தத்தின் ஒரு பகுதிதான் என்று வாதிடுகிறார். “அமெரிக்கா ஒன்று அமைதியைத் தேர்ந்தெடுக்க வேண்டும் அல்லது இஸ்ரேல் வழியாகப் போரைத் தொடர வேண்டும். இரண்டையும் ஒரே நேரத்தில் செய்ய முடியாது” என்று அவர் எச்சரித்துள்ளார்.

உலகின் 20 சதவீதத்திற்கும் அதிகமான கச்சா எண்ணெய் மற்றும் எரிவாயு போக்குவரத்து நடைபெறும் ஹார்முஸ் ஜலசந்தி மூடப்பட்டுள்ளது, உலக நாடுகளை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. ஏற்கனவே, இந்த வழித்தடத்தைப் பயன்படுத்தும் கப்பல்களுக்கு ஒரு பேரல் எண்ணெய்க்கு 1 டாலர் கட்டணம் வசூலிக்க ஈரான் திட்டமிட்டுள்ளதாகச் செய்திகள் வெளியான நிலையில், தற்போது முழுமையாக மூடப்பட்டுள்ளது எரிபொருள் விலையை உலகளவில் உயர்த்தக்கூடும் என அஞ்சப்படுகிறது.

மத்தியஸ்தராகச் செயல்பட்ட பாகிஸ்தான், இந்த ஒப்பந்தத்தில் லெபனான் சேர்க்கப்பட்டுள்ளதாகக் கூறுகிறது. ஆனால், இஸ்ரேலும் அமெரிக்காவும் அதனை மறுப்பதால் தற்போது இந்த ஒப்பந்தம் முறியும் நிலையில் உள்ளது. “உலக நாடுகள் லெபனானில் நடக்கும் படுகொலைகளைப் பார்த்துக் கொண்டிருக்கின்றன. அமெரிக்கா தனது வாக்குறுதியைக் காப்பாற்றுமா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்” என்று ஈரான் தரப்பு தெரிவித்துள்ளது.

இந்தச் சூழலால் மத்திய கிழக்கில் மீண்டும் ஒரு முழு அளவிலான போர் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

# விறு விறு ஓட்டு - புதுவை,அசாம்,கேரளம்!



திருவனந்தபுரம், ஏப். 09–

தமிழகம், மேற்குவங்கம், அசாம், கேரளம் ஆகிய 4 மாநிலங்கள் மற்றும் புதுச்சேரி யூனியன் பிரதேசம் ஆகியவற்றிக்கு கடந்த மாதம் 15–ந் தேதி தேர்தல் தேதியை இந்திய தேர்தல் ஆணையம் அறிவித்தது. அவற்றில் அசாம், கேரளம், புதுச்சேரியில் (வியாழக்கிழமை) தேர்தல் நடக்கிறது.

இந்நிலையில் அசாம், கேரளம், புதுச்சேரியில் சட்டசபை தேர்தலுக்கான வாக்குப்பதிவு தொடங்கி உள்ளது. முன்னதாக அங்கு அரசியல் கட்சிகளின் முகவர்கள் முன்னிலையில் மாதிரி வாக்குப்பதிவு (Mock Poll) நடைபெற்றது. வாக்குப்பதிவு நடைபெறும் இடங்களில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

காலை 7 மணிக்கு வாக்குப்பதிவு தொடங்கியநிலையில், மாலை 6 மணி வரை பொதுமக்கள் வாக்களிக்கலாம். இதற்காக தேர்தல் ஆணையம் விரிவான பாதுகாப்பு மற்றும் நிர்வாக ஏற்பாடுகளை செய்துள்ளது.

வாக்குப்பதிவுக்காக பல்லாயிரக்கணக்கான வாக்குச்சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. பதற்றமானதாகக் கண்டறியப்பட்டுள்ள வாக்குச்சாவடிகளில் கூடுதல் துணை ராணுவப்படையினர் மற்றும் கண்காணிப்பு கேமராக்கள் மூலம் தீவிரக் கண்காணிப்பு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

பொதுமக்கள் சிரமமின்றி தங்கள் ஜனநாயகக் கடமையை ஆற்ற ஏதுவாக, தேர்தல் நடைபெறும் இந்த மாநிலங்களில் பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. அசம்பாவிதங்களைத் தவிர்க்கவும், அமைதியான முறையில் தேர்தல் நடைபெறவும் மதுக்கடைகளை மூட தேர்தல் ஆணையம் உத்தரவிட்டுள்ளது.

வாக்காளர் அடையாள அட்டை அல்லது தேர்தல் ஆணையம் அங்கீகரித்துள்ள இதர 11 ஆவணங்களில் ஏதேனும் ஒன்றைக் காண்பித்து, பொதுமக்கள் அனைவரும் தவறாமல் வாக்களிக்க வேண்டும் என தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

### வாக்கு எண்ணிக்கை

இன்று பதிவாகும் வாக்குகள் அனைத்தும் பலத்த பாதுகாப்புடன் வாக்கு எண்ணும் மையங்களுக்குக் கொண்டு செல்லப்படும். அடுத்த மாதம் (மே) 4–ந் தேதி வாக்குகள் எண்ணப்பட்டு, முடிவுகள் அறிவிக்கப்பட உள்ளன.

மதுரை மணி
தலையங்கம்
வியாழக்கிழமை 09.04.2026
விசுவாவசு தமிழ் வருடம்
பங்குனி மாதம் 26-ம் தேதி

# ஸ்டாலின் Vs ஈபிஎஸ் Vs விஜய் Vs சீமான்: பெண்களுக்காக இவர்கள் முன் வைக்கும் வாக்குறுதிகள் என்னென்ன?



தமிழ்நாடு சட்டமன்ற தேர்தல் பல்வேறு எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தி இருக்கிறது. மீண்டும் ஆட்சியை தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்பதில் திமுக தீவிரமாக இருக்கிறது, இழந்த ஆட்சியை மீட்டு விட வேண்டும் என்பதில் அதிமுக தீவிரமாக இருக்கிறது. மற்றொருபுறம் பல ஆண்டுகளாக தேர்தல் களத்தில் இருந்து ஒரு கணிசமான இடத்தில் வெற்றி பெற வேண்டும் என நாம் தமிழர் கட்சி களம் காண்கிறது. முதன்முறையாக விஜய்யின் தமிழக வெற்றிக்கழகம் சட்டமன்றத் தேர்தலில் போட்டியிடுகிறது. இப்படி நான்குமுனைப் போட்டி நிலவுவதால் மக்கள் யாருக்கு வாக்களிப்பார்கள், யாரை தேர்ந்தெடுப்பார்கள் என்ற எதிர்பார்ப்பு நாளுக்கு நாள் வருகிறது. அந்த வகையில் வாக்காளர்களை கவர்வதற்காக அரசியல் கட்சிகள் தரப்பில் பல்வேறு இலவச அறிவிப்புகள் வெளியே வந்துள்ளன. குறிப்பாக பெண் வாக்காளர்களை குறி வைத்து தான் அரசியல் கட்சிகள் தேர்தல் அறிக்கைகளையே தயாரித்துள்ளன. அந்த வகையில் எந்தெந்த கட்சி பெண்களை கவர என்னென்ன வாக்குறுதி தந்திருக்கிறது என்பதை தற்போது தெரிந்து கொள்ளலாம்.

**உரிமை தொகை:**

திமுகவை பொருத்தவரை தற்போது மகளிர் உரிமைத் தொகை திட்டத்தின் கீழ் 1000 ரூபாய் வழங்கப்பட்டு வருகிறது அதனை 2000 ரூபாயாக உயர்த்துவோம் என அறிவிப்பு வெளியிட்டு இருக்கிறது. அடுத்ததாக பெண்கள் சுய உதவி குழுக்களுக்கு வட்டி இல்லாமல் ஐந்து லட்சம் ரூபாய் வரை கடன் வழங்கப்படும் என திமுக அறிவித்துள்ளது.

அதிமுகவை பொறுத்தவரை குலவிளக்கு என்ற திட்டத்தை தொடங்கி பெண்களுக்கு மாதம் 2000 ரூபாய் நிதி உதவி வழங்கப்படும் எனக் கூறியிருக்கிறது. அதேபோல பொங்கல் பண்டிகைக்கு ஆயிரம் ரூபாயும் தீபாவளி பண்டிகையின் போது இலவசமாக புடவையும் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டு இருக்கிறது. பெண்கள் சுய தொழில் தொடங்க 10,000 ரூபாய் நிதி உதவி வழங்கப்படும் என அறிவித்திருக்கிறது.

விஜய்–இன் தமிழக வெற்றி கழகத்தை பொருத்தவரை பெண்களுக்கு மாதம் 2500 ரூபாய் நிதி உதவி வழங்கப்படும், திருமணமாகும் பெண்களுக்கு தங்கம் மற்றும் பட்டுப்புடவை சீராக வழங்கப்படும் , பெண்கள் சுய உதவிக் குழுக்களுக்கு 5 லட்சம் ரூபாய் வரை வட்டியில்லா கடன் வழங்கப்படும் , பெண்களுக்கு இலவச சானிட்டரி நாப்கின் வழங்கப்படும் என தெரிவித்திருக்கிறது.

**நேரடி நிதி உதவி:**

திமுக ஆட்சி அமைத்தால் குடும்பங்களுக்கு 8000 ரூபாய் மதிப்பிலான கூப்பன் வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருக்கிறது. இந்த கூப்பனை கொண்டு தங்கள் வீட்டிற்கு தேவையான வாஷிங் மெஷின், பிரிட்ஜ், ஏசி உள்ளிட்டவற்றில் ஏதேனும் ஒன்று அவர்கள் வாங்கிக் கொள்ளலாம்.

அதேபோல அஇஅதிமுகவை பொறுத்தவரை தாங்கள் ஆட்சிக்கு வந்த உடனே அனைத்து குடும்பங்களுக்கும் 10,000 ரூபாய் ஒருமுறை நிதி உதவியாக வழங்கப்படும் என்றும் இலவசமாக பிரிட்ஜ் வழங்கப்படும் என்றும் தெரிவித்திருக்கிறது.

விஜயின் தவெக புதிதாக பிறக்கக்கூடிய குழந்தைகளுக்கு தங்க மோதிரம் வழங்கப்படும் என தெரிவித்திருக்கிறது.

**சிலிண்டர்:**

தற்போது எல்பிஜி சிலிண்டர் விலை உயர்வும் எல்பிஜி தட்டுப்பாடு குறித்தும் தான் பரவலாக பேசப்பட்டு வருகிறது. இதுவும் தேர்தல் வாக்குறுதிகளில் முக்கிய இடம் பிடித்திருக்கிறது. திமுகவை பொறுத்தவரை எல்பிஜி சிலிண்டர் விவகாரத்தில் எந்த ஒரு வாக்குறுதியும் தரவில்லை. ஆனால் அதிமுக ஆண்டுக்கு மூன்று இலவச எல்பிஜி சிலிண்டர் வழங்கப்படும் என தெரிவித்திருக்கிறது தமிழக வெற்றிக் கழகத்தை பொருத்தவரை ஆறு இலவச எல்பிஜி சிலிண்டர் வழங்கப்படும் எனக் கூறியிருக்கிறது.

**இலவச பேருந்து:**

தற்போது பெண்கள் கட்டணமில்லாமல் உள்ளூர் அரசு பேருந்துகளை பயன்படுத்துகின்றனர். அது அப்படியே தொடரும் என திமுக அறிவித்து இருக்கிறது. அதிமுகவை பொறுத்தவரை பெண்கள் மட்டும் இல்லாமல் ஆண்களுக்கும் இலவச பேருந்து பயணம் என தெரிவித்திருக்கிறது. அதேபோல இருசக்கர வாகனம் வாங்கக்கூடிய ஐந்து லட்சம் பெண்களுக்கு 25 ஆயிரம் ரூபாய் மானியம் வழங்கப்படும் என தெரிவித்திருக்கிறது. தவெக அனைத்து அரசு பேருந்துகளிலும் மகளிருக்கு இலவச பயணம் என்ற வாக்குறுதி தந்திருக்கிறது. சீமானின் நாம் தமிழர் கட்சியை பொறுத்தவரை பொருட்களை இலவசமாக தருவதை தவிர்த்து அரசு சேவைகளை இலவசமாகவும் தரமாகவும் வழங்குவதை நோக்கமாக கொண்டு தேர்தல் வாக்குறுதிகளை வெளியிட்டு இருக்கின்றனர். அந்த வகையில் அரசு பள்ளிகளுக்கு இணையாக தனியார் பள்ளிகள் மாற்றப்படும் எல்கேஜி முதல் ஆராய்ச்சி படிப்பவரை அனைத்து மாணவர்களுக்கும் கல்வி முற்றிலுமாக இலவசமாக வழங்கப்படும் என தெரிவித்திருக்கிறது. அதேபோல அரசு மருத்துவமனைகள் நவீனப்படுத்தப்பட்டு ஏழை பணக்காரர் பாகுபாடு இல்லாமல் அனைவருக்கும் உயர்தர சிகிச்சை மற்றும் மருந்து பொருட்கள் முற்றிலும் இலவசமாக வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டிருக்கிறது. மேலும் சுத்திகரிக்கப்பட்ட தரமான குடிநீர் வீடுகளுக்கே தடையின்றி இலவசமாக வழங்கப்படும் என கூறப்பட்டிருக்கிறது. பெண்களுக்கு பாதுகாப்பான சமூகம், 50% இட ஒதுக்கீடு என்பன உள்ளிட்ட வாக்குறுதிகளை தந்திருக்கிறது. எனவே இந்த இலவசங்களில் எந்த இலவசத்தை பெண்கள் தேர்வு செய்ய போகிறார்கள் என்பது மே 4ஆம் தேதி தெரிந்துவிடும்.

# பெண்களுக்கான இடஒதுக்கீட்டு மசோதாவை தாமதப்படுத்தக் கூடாது; பிரதமர் மோடி!



புதுடில்லி, ஏப். 09–

‘சட்டசபையில் பெண்களுக்கான இடஒதுக்கீடு என்பது காலத்தின் கட்டாயம். இந்த இடஒதுக்கீட்டைக் கொண்டு வருவதில் ஏற்படும் எந்தவொரு தாமதமும் மிகுந்த துரதிர்ஷ்டவசமானது,’ என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கை; மகளிர் இடஒதுக்கீட்டை மேம்படுத்தும் முக்கிய மசோதாவை நிறைவேற்ற வரும் ஏப்ரல் 16ம் தேதி பார்லி கூடுகிறது. இதனை சட்டப்பூர்வ நடவடிக்கை என்பதை விட, நம் நாட்டின் கோடிக்கணக்கான பெண்களின் விருப்பத்தின் பிரதிபலிப்பாகும். பெண்கள் முன்னேறும்போது சமூகம் முன்னேறுகிறது என்ற உறுதிப்பாடு தான் இது.

இந்திய மக்கள் தொகையில் கிட்டத்தட்ட பாதி பேர் பெண்கள். தேசத்திற்கான அவர்களின் பங்களிப்பு மகத்தானது.

இன்று அறிவியல், தொழில்நுட்பம், தொழில்முனைவு, விளையாட்டு, இசை மற்றும் கலை என ஒவ்வொரு துறையிலும் பெண்கள் முன்னணியில் உள்ளனர்.

கடந்த பல ஆண்டுகளில், பெண் வலிமைக்காக கல்வி, சுகாதாரம் உள்ளிட்டவற்றில் பெரும் முன்னேற்றங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இருப்பினும், அரசியலில் அவர்களின் பிரதிநிதித்துவம் போதுமானதாக இல்லை.

எனவே, 2029 லோக்சபா தேர்தலும், வரும் மாநிலச் சட்டசபை தேர்தல்களும் மகளிர் இடஒதுக்கீட்டுடன் நடத்தப்படுவது அவசியமாகும். சட்டசபையில் பெண்களுக்கான இடஒதுக்கீடு என்பது காலத்தின் கட்டாயம். இந்த இடஒதுக்கீட்டைக் கொண்டு வருவதில் ஏற்படும் எந்தவொரு தாமதமும் மிகுந்த துரதிஷ்டவசமானது.

இந்த முடிவை தாமதப்படுத்துவது என்பது நமது ஜனநாயகத்தின் வலிமையைத் தாமதப்படுத்துவதாகும். இது ஒரு அரசுக்கோ அல்லது கட்சிக்கோ சொந்தமானது அல்ல. இது ஒட்டுமொத்த தேசத்திற்கும் சொந்தமானது. நமது பெண் சக்திக்கு நாம் செய்ய வேண்டிய கடமை இது. எனவே, கட்சி பாகுபாடின்றி அனைத்து கட்சி எம்பிக்களும் இதற்கு ஆதரவளிக்க வேண்டும், இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

# ஆசிரியர் தகுதித் தேர்வுக்கு விண்ணப்பிக்க ஏப். 10 கடைசி நாள்!

சென்னை, ஏப். 09–

தமிழகத்தில் உள்ள அரசு பள்ளிகள், உதவி பெறும் பள்ளிகள், தனியார் பள்ளிகளில் ஆசிரியர்களாக பணியாற்ற கூடியவர்கள் தகுதித் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

2015 செப்டம்பர் 1–ந் தேதி அல்லது அதற்கு முன்னர் இடைநிலை மற்றும் பட்டதாரி ஆசிரியர் பணி செய்து வரும் ஆசிரியர்கள் இத்தேர்வினை கட்டாயம் எழுத வேண்டும் என்று சுப்ரீம் கோர்ட்டு உத்தரவிட்டுள்ளது.

இதற்கான விண்ணப்ப பதிவு ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் கடந்த பிப்ரவரி மாதம் 18–ந் தேதி தொடங்கியது.

இதை தொடர்ந்து தேர்வுக்கு விண்ணப்பிக்கும் ஆசிரியர்களுக்கான பணி சான்றை விரைந்து வழங்க மாவட்ட, வட்டார கல்வி அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதில் தாமதம் ஏற்பட்டு ஆசிரியர்கள் டெட் தேர்வுக்கு விண்ணப்பிக்க இயலாத சூழ்நிலை ஏற்பட்டால் சம்பந்தப்பட்ட மாவட்ட, வட்டார கல்வி அதிகாரிகள் தான் பொறுப்பேற்க நேரிடும் என பள்ளிக் கல்வித்துறை எச்சரித்து இருந்தது. இதைத் தொடர்ந்து ஆசிரியர்களுக்கு பணி சான்று வழங்கப்பட்டு வருகிறது.

இதைத் தொடர்ந்து பணியில் உள்ள ஆசிரியர்கள் டெட் தேர்வுக்கு விண்ணப்பித்து வருகின்றனர். விண்ணப்பிக்க கூடிய கால அவகாசம் நாளை (10–ந் தேதி) நிறைவு பெறுகிறது. அதனால் இதுவரையில் விண்ணப்பிக்காத ஆசிரியர்கள் உடனடியாக விண்ணப்பிக்குமாறு கல்வித் துறை அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர். டெட் தகுதித் தேர்வு ஜூலை 4, 5 ஆகிய தேதிகளில் நடைபெற உள்ளது.

# EPFO 3.0 இல் வரும் 5 மேஜர் மாற்றங்கள்!!




இந்தியாவின் பல்வேறு நிறுவனங்களிலும் வேலை செய்யும் கோடிக்கணக்கான ஊழியர்களின் நலனுக்காக வருங்கால வைப்பு நிதி திட்டம் எனப்படும் EPFO திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இதன்படி ஊழியரின் பெயரில் பிஎஃப் கணக்கு தொடங்கப்பட்டு அதில் மாதம் தோறும் கணிசமான பணம் வரவு வைக்கப்படுகிறது. நம்முடைய பிஎஃப் கணக்கில் இருக்கும் பணத்திற்கு அரசு வட்டியும் வழங்குகிறது. இது காம்பவுண்டிங் முறையில் வளர்ச்சி அடைந்து பெரிய லாபத்தை நமக்கு பெற்று தருகிறது. நம் பிஎஃப் கணக்கில் இருக்கும் பணத்தை பணி ஓய்வுக்கு முன்னரே கூட நாம் எடுத்து பயன்படுத்தலாம். தற்போது இதற்காக விண்ணப்பம் செய்து காத்திருக்க வேண்டும். ஆனால் இனி அந்த தேவை இல்லை. ஏனெனில் யுபிஐ மற்றும் ஏடிஎம் மூலமே பிஎஃப் கணக்கில் இருக்கும் பணத்தை நாம் எடுத்து பயன்படுத்த முடியும்.

இதற்காக ஈஎஃப்ஓ 3.0 (EPFO 3.0) என்ற புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது. அதன் படி ஊழியர்கள் தங்களது பிஎஃப் பணத்தை எளிதாகவும், வேகமாகவும் டிஜிட்டல் முறையில் பெறும் வசதி வர உள்ளது. ஈபிஎஃப்ஓ 3.0 மூலம் நம்முடைய பிஎஃப் கணக்கு, வங்கி சேவைகளுக்கு நிகரான டிஜிட்டல் மேம்பாடுகளை பெற உள்ளது. எப்படி நாம் ஒரு கிளிக்கிலேயே வங்கி சேவைகளை பெறுகிறோமோ அதே போல பிஎஃப் சேவையும் ஒரு கிளிக்கிலேயே கிடைக்கும், குறிப்பாக பிஎஃப் பணத்தை நாம் டிஜிட்டல் முறையிலேயே மேலாண்மை செய்யலாம். ஈபிஎஃப்ஓ 3.0 திட்டத்தில் மிகப்பெரிய மாற்றமாக ஊழியர்கள் தங்களது பிஎஃப் பணத்தை யுபிஐ மூலம் நேரடியாக பெறும் வசதி அறிமுகம் செய்யப்படுகிறது. நம் வங்கி கணக்கில் இருக்கும் பணத்தை எப்படி ஜிபே, பேடிஎம் மூலம் எடுத்து பயன்படுத்துகிறோமோ அதே போல பிஎஃப் கணக்கில் இருக்கும் பணத்தை நாம் யுபிஐ மூலம் எடுத்து பயன்படுத்தலாம். அதற்கான கட்டமைப்புகள் செய்யப்பட்டு வருகின்றன.

அதே போல பிஎஃப் கணக்கில் இருக்கும் பணத்தை நாம் நேரடியாகவே ஏடிஎம் மூலம் பெறலாம். அந்த வகையில் நம் வங்கி கணக்குகளை போல பிஎஃப் கணக்கையும் நாம் எளிதாகவும் வேகமாகவும் பயன்படுத்த முடியும். இது வரை பிஎஃப் பணத்தை நாம் கிளெய்ம் செய்ய 13 வகை காரணங்கள் இருந்தன. அதனை 3 வகைகளாக குறைத்துள்ளனர். இதன்படி அவசிய தேவைகள், வீட்டு தேவைகள், சிறப்பு சூழ்நிலைகள் ஆகிய 3 தேவைகளுக்கு பிஎஃப் கணக்கில் இருக்கும் பணம் எடுக்கலாம்

பிஎஃப் தொகையில் 75 சதவிகிதத்தை நாம் எப்போது வேண்டுமானாலும் பெறலாம். குறிப்பாக எந்த ஆவணங்களும் இல்லாமலேயே பணம் பெற முடியும் என்ற வகையில் மாற்றம் வர உள்ளது. ஒரு வேளை நீங்கள் லே ஆஃப் செய்யப்படுகிறீர்கள், வேறு வழியே இல்லாமல் வேலையை ராஜினாமா செய்கிறீர்கள் எனும் போது பிஎஃப் தொகையில் இருந்து 75 சதவிகிதத்தை உடனடியாக பெற முடியும். மீதமுள்ள 25 சதவிகிதத்தை 12 மாதங்கள் கழித்து பெறலாம்.

மேலும் 55 வயதில் ஓய்வு பெற்றால், அல்லது நாட்டை விட்டு நிரந்தரமாக வெளியேறினால் முழு பிஎஃப் தொகையையும் பெற முடியும் என மாற்றம் கொண்டு வரப்பட உள்ளது. பழைய ஈபிஎஃப்ஓ முறையில் நாம் பணம் எடுக்க வேண்டும் என்றால் விண்ணப்பம் செய்துவிட்டு பல வாரங்கள் காத்திருக்க வேண்டும். அதிக ஆவணங்கள் சமர்பிக்க வேண்டும். இதனை அதிகாரிகள் ஏற்றால் தான் பணம் வரும் இல்லை என்றால் நிராகரிக்கப்படலாம். ஆனால் ஈபிஎஃப்ஓ 3.0 திட்டம் நினைத்த நேரத்தில் உங்கள் பிஎஃப் கணக்கில் இருக்கும் பணத்தை எடுத்து பயன்படுத்த வழிவகை செய்கிறது.



புதுக்கோட்டை மாவட்டம் திருமயம் சட்டமன்ற தொகுதியில் திமுக உள்ளிட்ட மாற்றுக் கட்சியை சேர்ந்த 300–க்கும் மேற்பட்டோர், அதிமுக வேட்பாளர் வைரமுத்து தலைமையில் அதிமுகவில் இணைந்தனர். மாற்று கட்சியினருக்கு அதிமுக வேட்பாளர் வைரமுத்து சால்வை அணிவித்து வரவேற்றார்.

# தங்கம், வெள்ளி விலை மீண்டும் சரிவு!



சென்னை, ஏப். 09–

சென்னையில் இன்று 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.1,600 குறைந்து ரூ.1,12,00–க்கு விற்பனை செய்யப்படுகிறது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.200 குறைந்து ரூ.14,000–க்கு விற்பனை செய்யப்படுகிறது.

தங்கத்தை போன்று வெள்ளி விலையும் இன்று குறைந்துள்ளது. வெள்ளி விலை கிராமுக்கு ரூ.5 குறைந்து ஒரு கிராம் வெள்ளி ரூ.260–க்கும், பார் வெள்ளி 2 லட்சத்து 60 ஆயிரம் ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழக மாணவர் சேர்க்கை: தவறவிட்டவர்களுக்கு கடைசி வாய்ப்பு!



தமிழ்நாடு மாநில அரசின் முன்னணி பல்கலைக்கழகங்களில் ஒன்றான தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகம் (TNOU), தொலைதூரக் கல்வி முறையின் கீழ்,தற்போது 2026–ஆம் ஆண்டிற்கான மாணவர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. இதற்கான விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க ஏற்கனவே நிர்ணயிக்கப்பட்டிருந்த காலக்கெடு கடந்த மார்ச் 31–ஆம் தேதியுடன் நிறைவடைந்தது. இருப்பினும், பல்வேறு காரணங்களால் விண்ணப்பிக்க இயலாத மாணவர்களின் கோரிக்கைகளை பல்கலைக்கழக நிர்வாகம் பரிசீலித்தது.

இதனைத் தொடர்ந்து, மாணவர்களின் நலன் மற்றும் உயர்கல்வி வாய்ப்பினை உறுதி செய்யும் நோக்கில், விண்ணப்பிப்பதற்கான கடைசி தேதியை ஏப்ரல் 13–ஆம் தேதி வரை நீட்டித்து பல்கலைக்கழகம் அதிரடி உத்தரவு பிறப்பித்துள்ளது. இதன் மூலம் விருப்பமுள்ள மாணவர்கள் கூடுதல் கால அவகாசத்தைப் பயன்படுத்தி தங்களுக்குப் பிடித்தமான பாடப்பிரிவுகளில் சேர வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து தமிழ்நாடு திறந்தநிலை பல்கலைக்கழகப் பதிவாளர் ஜி.ஆர். செந்தில் குமார் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், இந்த வாய்ப்பை மாணவர்கள் முறையாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார். தகுதியுள்ள நபர்கள் பல்கலைக்கழக இணையதளம் அல்லது அங்கீகரிக்கப்பட்ட கற்றல் மையங்கள் வாயிலாக ஏப்ரல் 13–க்குள் தங்கள் சேர்க்கையை உறுதி செய்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# உங்கள் திருமணம் எப்படி நடைபெறும்? ஜாதக கட்டம் கூறும் தகவல்கள்!



திருமணம் என்பது உணர்வுப்பூர்வமான பந்தம் மட்டும் அல்ல, தனி ஒரு நபரின் பொருளாதார நிலை மற்றும் சமூக நிலையில் பெரும் தாக்கத்தை உண்டாக்கும் ஒரு முக்கிய நிகழ்வு ஆகும். தனி நபரின் வாழ்க்கையின் இரண்டாம் பகுதியை குறிக்கும் இந்த திருமணம், ஒரு சில கிரகங்களின் பார்வையால் கலவையான பலன்களை எதிர்கொள்ளலாம். அதாவது, உங்கள் வருங்கால வாழ்க்கை துணையின் வாழ்க்கை நிலையை அறிந்துக்கொள்ள உதவி செய்யும் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர். குறிப்பாக, கிரகங்களின் நிலைபாடு, உங்கள் திருமணத்தை முடிப்பதில் தடைகளை கொண்டு வருமா? மாறாக திருமணத்தை சிறப்பாக செய்து முடிக்குமா? என்பதை புரிந்துக்கொள்ளவும் இது உதவியாக இருக்கும். அதுமட்டும் அல்ல, திருமணத்திற்கு பின்னர் தன் வாழ்க்கை தன்னுடன் எப்படி நடந்துக்கொள்வார், தனது வாழ்க்கை லட்சியத்திற்கு உதவி செய்வாரா? இல்லையா? என்பதை அறிந்துக் கொள்ளவும் முடியும் என நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

**திருமணத்தை விவரிக்கும் கட்டங்கள்!**

தனி ஒரு நபரின் ஜாதகத்தில் 7–ஆம் வீடு கணவன் / மனைவி குணாதிசயங்களை பிரதிபலிக்கும். அதேநேரம் 8–ஆம் வீடு வருங்கால வாழ்க்கை நிலையின் பொருளாதார நிலை எப்படி இருக்கும் என்பதை கணிக்க உதவி செய்யவும். மேலும் 11–ஆம் வீடு வருமானம் மற்றும் நிதி ஆதாயங்களை குறிப்பிடுகிறது. குறித்த இந்த வீடுகளின் கிரகங்களின் (குரு மற்றும் சுக்கிரன்) நிலைபாடு என்ன? கிரகங்களின் நிலை ஜாதகத்திற்கு உரியவரின் திருமண வாழ்க்கையில் உண்டாக்கும் மாற்றம் என்ன? என்பதை கணிக்க உதவி செய்கிறது.

உங்கள் ஜாதகத்தில் சுக்கிரன் இருக்கும் இடத்தை பொறுத்து உங்கள் திருமணம் ஆடம்பரமாக நடக்குமா? அல்லது எளிமையாக நடக்குமா? என்பதை கணிக்க முடியும். அன்பு, செல்வம் மற்றும் உறவுகளை குறிக்கும் இந்த கிரகம் தான் ஆட்சி செய்யும் ராசிகளான ரிஷபம், துலாம் ராசியில் வலுவான நிலையில் இருந்தாலோ; அல்லது மீன ராசியில் உச்சம் பெற்று இருந்தாலோ உங்கள் திருமணம் மிகவும் ஆடம்பரமாக நடைபெறும். பணத்தை அதிகம் செலவு செய்து, மிகவும் பிரமாண்டமாக உங்கள் திருமணத்தை முடிப்பீர்கள்.

உங்கள் ஜாதகத்தில் 7வது மற்றும் 11–வது கட்டங்களுடன் ஆதாய வீடு இணைந்திருந்தால், திருமணத்திற்கு பின் உங்கள் வாழ்க்கை செல்வ செழிப்புடன் இருக்கும். குறிப்பாக, உங்கள் வருங்கால வாழ்க்கை துணையின் வருமான ஆதாரங்கள் அதிகரிக்கும், பொருளாதார நிலையும் மேம்படும்.


வேத ஜோதிடத்தில் குரு, வளர்ச்சி மற்றும் செழிப்பின் கிரகமாக பார்க்கப்படுகிறது. உங்கள் ஜாதகத்தில் 7–வது வீட்டில் அல்லது அதற்கு அருகில் குரு இருந்தால் அது நல்ல ஒரு அறிகுறியாக பார்க்கப்படுகிறது. திருமணத்திற்கு முன் இருந்த கடன் பிரச்சனைகளை இந்த ஜாதக அமைப்பு முடித்து வைக்கும். அதாவது, கடன் பிரச்சனைகளை குறைத்து, நிம்மதியான வாழ்வு வாழ உதவி செய்யும்.

உங்கள் ஜாதகத்தில் 8–ஆம் ஸ்தானம் மிகவும் வலுவான நிலையில் இருப்பது, வாழ்க்கை துணையின் ஆதரவை குறிக்கிறது. பொருளாதார ரீதியாகவும், உணர்வு பூர்வமாகவும் உங்களுக்கு உற்ற துணையாகவும் அவர் இருப்பார். மேலும், புகுந்த வீட்டின் பொருளாதார நிலையை உயர்த்தும் ஒரு ஜாதக அமைப்பாகவும் இது பார்க்கப்படுகிறது. குறிப்பிட்ட இந்த ஜாதக அமைப்பு கொண்டிருக்கும் நபரை திருமணம் செய்வது, திருமணத்திற்கு பின் உங்களை செல்வந்தராக மாற்றும்.

உங்கள் ஜாதகத்தில் 7–ஆம் வீட்டில் அல்லது 11–வது வீட்டில் ராகு இடம்பெறுவது, திடீர் உயர்வு, எழுச்சியை குறிக்கிறது. பொருளாதார ரீதியாக உங்களை அடுத்தடுத்த கட்டத்திற்கு கொண்டுச் செல்லும் எனவும் கூறுகிறது.

மறுபுறம், குறித்த இந்த 3 கட்டங்களை மட்டும் பார்ப்பது கூடாது. ஆரோக்கியமான திருமண வாழ்வுக்கு, முழுமையான ஜாதக அமைப்பதை ஆய்வு செய்வது அவசியம். தனி நபரின் தனித்துவமான ஜாதக அமைப்பை பொறுத்து, அவர்களுக்கான திருமண பலன்கள் மாறுபடலாம் எனவும் கூறப்படுகிறது. ஜோதிடத்தை ஒரு வழிகாட்டியாக மட்டுமே பயன்படுத்த வேண்டும், எதிர்காலத்தை கூறும் ஒரு முறையாக பயன்படுத்த கூடாது எனவும் நிபுணர்கள் குறிப்பிடுகின்றனர்.

# 14 ஆயிரம் ஊழியர்களை பணி நீக்கம் செய்ய முடிவா?




செயற்கை நுண்ணறிவு ஆதிக்கம் காரணமாக முன்னணி நிறுவனங்களும் சமீப காலமாக ஆட்குறைப்பில் ஈடுபட்டு வருகின்றன. செயற்கை நுண்ணறிவு ஆதிக்கம் அதிகரித்து இருப்பதால் பல்வேறு துறைகளிலும் வேலையிழப்புகள் அதிகரிக்கும் என கூறப்படுகிறது. இதனை உறுதி செய்யும் விதமாக ஆரக்கிள் உள்ளிட்ட முன்னணி ஐடி நிறுவனங்களும் சமீப காலமாக ஆட்குறைப்பில் ஈடுபட்டு வருகின்றன. ஐடி, இ–காமர்ஸ் என பல துறைகளிலும் கொடி கட்டிப் பறக்கும் அமேசான் நிறுவனமும் ஆட்குறைப்பு நடவடிக்கையை ஏற்கனவே எடுத்திருந்தது. இந்த நிலையில், மேலும் 14 ஆயிரம் ஊழியர்களை பணி நீக்கம் செய்ய அமேசான் முடிவு செய்து இருப்பதாக தகவல் வெளியானது. இது அந்நிறுவன ஊழியர்களுக்கு அதிர்ச்சியை கொடுத்த நிலையில், இது தொடர்பாக விளக்கம் அளித்துள்ள அமேசான், அடுத்த மாதம் 14 ஆயிரம் ஊழியர்கள் பணி நீக்கம் என்ற தகவலில் உண்மையில்லை என்று தெரிவித்துள்ளது.

## நலம் நலமறிய..! மருத்துவ குறிப்புகள்



## குறட்டையைக் குறைக்க டிப்ஸ்!



தூங்கும் போது நாசி மற்றும் தொண்டை வழியாக மாறி மாறி சுவாசிப்பதால் குறட்டை ஏற்படுகிறது. சுவாசத்தில் ஏற்படும் இந்த இடையூறு காரணமாக தொண்டையில் உள்ள திசுக்கள் அதிர்ந்து குறட்டை ஒலி எழுப்புகிறது.

குறட்டையால் அருகில் உறங்குவோருக்கு தூக்கம் கெடுகிறது. குறட்டை ஏற்பட உடற்பருமன், வாய்/நாசி/தொண்டை கோளாறு, தூக்கமின்மை ஆகியவை காரணமாக இருக்கலாம். தூங்கும் முன் மது அருந்தினால் கூட குறட்டை ஏற்படலாம்.

சத்தமான குறட்டை, அடிக்கடி குறட்டை, தூங்கும் போது மூச்சுத்திணறல், காலை எழுந்தவுடன் தலைவலி, வறண்ட தொண்டையுடன் விழித்தல், ஞாபக மறதி, பகல் நேரத்தில் தூக்கக் கலக்கம் ஆகியவை இருந்தால் மருத்துவரை அணுகவும்.

குறட்டை தொல்லையில் இருந்து விடுபட உதவும் சில டிப்ஸ், இதோ:–

1. உடல் எடை குறைக்கவும்: உடற்பருமன் உள்ளவர்கள் குறட்டை விட அதிக வாய்ப்புண்டு. தொண்டை பகுதியில் கொழுப்புத் திசு மற்றும் நலிவான தசை இருந்தால் குறட்டை ஏற்படும். எனவே உடல் எடை குறைப்பது அவசியமாகும்.

2. மது அருந்தக்கூடாது: தொண்டை தசைகளை லேசாக்கி குறட்டை ஏற்பட காரணமாக அமைவதால் மது அருந்துவதை தவிர்க்கவும்.

3. பக்கவாட்டில் படுக்கவும்: நேராக படுத்தால் குறட்டை ஏற்பட அதிக வாய்ப்புண்டு. எனவே, பக்கவாட்டில் படுக்கவும்.

4. பழங்கள்: உணவில் மெலடோனின் அதிகம் எடுத்துக் கொண்டால் ஆழ்ந்த உறக்கம் பெறலாம். எனவே, மெலடோனின் அதிகம் உள்ள வாழைப்பழம், அன்னாசிப் பழம், கமலாப்பழம் ஆகியவை சாப்பிடலாம்.

5. தலை உயர்த்தி படுக்கவும்: தலையணைகள் கொண்டு தலையை உயர்த்தி வைத்து தூங்கவும். தலையை உயர்த்தி வைத்து தூங்கினால் சீராக சுவாசிக்கலாம்.

6. புகை பிடிக்காதீர்: சுவாசப்பாதையில் எரிச்சல் உண்டாக்குவதால் புகை பிடிப்பதை தவிர்க்கவும். புகை பிடித்தால் குறட்டை தொல்லை அதிகரிக்கும்.

7. தேன், இஞ்சி தேனீர்: எச்சில் சுரக்க செய்வதால் இஞ்சி தொண்டைக்கு இதமளிக்கும். தினமும் 2 முறை தேன், இஞ்சி தேநீர் அருந்தினால் குறட்டை தொல்லை குறையும்.

8. தூக்க மாத்திரை வேண்டாம்: அதிகமாக தூங்கினால் குறைட்டை ஏற்படும். எனவே, தூக்க மாத்திரைகளை தவிர்க்கவும்.

9. பால் குடிக்கலாம், ஆனால்... பால் மற்றும் பால் பொருட்கள் தொண்டை மற்றும் நாசியில் வீக்கம் ஏற்படுத்தும் தன்மை கொண்டதாகும். பால் குடிப்பதை முற்றிலுமாக தவிர்க்க தேவையில்லை. இருப்பினும், தூங்கும் முன் பால் அருந்த வேண்டாம்.

10. தண்ணீர்: உடலில் நீர் பற்றாக்குறையால் சளி உண்டாகிறது. இதனால் கூட குறட்டை ஏற்படலாம். ஆண்கள் நாளொன்றுக்கு 3.7 லிட்டர், பெண்கள் 2.7 லிட்டர் தண்ணீர் பருக வேண்டும்.

# தொடர்கிறது மீனவர்கள் கைது!



சென்னை, ஏப். 09–

எல்லை தாண்டி மீன் பிடிப்பதாகக் கூறி தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையால் கைது செய்யப்படுவதும், மீனவர்களின் விசைப் படகுகளைப் பறிமுதல் செய்து அரசுடைமையாக்குவது போன்ற நடவடிக்கைகளையும் இலங்கை அரசு மேற்கொண்டு வருகிறது. இதனால் மீனவர்களின் வாழ்வாதாரம் வெகுவாக பாதிக்கப்படும் சூழலும் நிலவி வருகிறது.

இதற்கிடையில், ராமநாதபுரம் மாவட்டம் பாம்பன் துறைமுகத்திலிருந்து மீனவர்கள் மீன்பிடிக்க கடலுக்கு சென்றனர். இந்த மீனவர்கள் அனைவரும் தனுஷ்கோடி–தலைமன்னார் இடையே மீன்பிடித்து கொண்டிருந்தனர்.

அப்போது ரோந்து கப்பலில் அங்கு வந்த இலங்கை கடற்படையினர், விசைப்படகை சுற்றி வளைத்தனர். அதில் இருந்த 10 மீனவர்களை எல்லை தாண்டி வந்து மீன்பிடித்ததாக கூறி சிறைபிடித்து கைது செய்ததுடன், படகையும் பறிமுதல் செய்து தலைமன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர். அங்கு மீனவர்கள் விசாரணை நடத்தி வருகின்றனர்.

10 மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்தது அவர்களது குடும்பத்தினரையும், மீனவ மக்களையும் மிகுந்த சோகம் அடையச் செய்துள்ளது. மேலும் அவர்களை விடுவிக்க வேண்டும் என மீனவ அமைப்புகள் கோரிக்கை விடுத்து உள்ளன.

# ஆந்திராவில் தலைமறைவாக இருந்த சவுக்கு சங்கர் கைது!



சென்னை, ஏப். 09–

நிபந்தனை ஜாமீனை மீறி, நீதிமன்றத்தில் சரணடையாமல் ஆந்திராவில் தலைமறைவாக இருந்த சவுக்கு சங்கரை சென்னை போலீஸார் நேற்று கைது செய்தனர். சவுக்கு மீடியா தலைமை செயல் அதிகாரியான பிரபல யூடியூபர் சவுக்கு சங்கர் மீது ஆதம்பாக்கம் மற்றும் சைதாப்பேட்டை போலீஸார் 2 மோசடி வழக்குகளைப் பதிவுசெய்து கடந்த டிச.13 அன்று கைது செய்தனர். அவருக்கு உடல்நலப் பிரச்சினைகள் இருப்பதால் ஜாமீனில் விடுவிக்கக்கோரி அவரது தாயார் கமலா தாக்கல் செய்திருந்த மனுவை விசாரித்த உயர் நீதிமன்றம் மார்ச் 25 வரை அவருக்கு இடைக்கால நிபந்தனை ஜாமீன் வழங்கியிருந்தது.

மார்ச் 25–க்குப் பிறகு நீதிமன்றத்தில் சரணடைய வேண்டிய சவுக்கு சங்கர் தலைமறைவானார். இந்நிலையில் சவுக்கு சங்கர் தன் மீதான 2 வழக்குகளையும் சிபிஐ விசாரணைக்கு மாற்றக்கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்திருந்தார். இந்த மனு மீதான விசாரணை நீதிபதி எம்.நிர்மல்குமார் முன்பாக நேற்று முன்தினம் நடந்தது.

அப்போது அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் குற்றவியல் வழக்கறிஞர் ஆர். முனியப்பராஜ், சவுக்கு சங்கர் தொடர்ந்து தலைமறைவாக இருந்து வருவதால் அவரை தலைமறைவு குற்றவாளியாக அறிவித்து சென்னை போலீஸார் தேடி வருவதாக தெரிவித்தார். மேலும் சிபிஐ விசாரணை கோரும் 2 வழக்குகளிலும் ஏற்கெனவே விசாரணை முடிக்கப்பட்டு குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுவிட்டதாகவும் தெரிவித்தார். அதைப்பதிவு செய்து கொண்ட நீதிபதி இந்த வழக்கு விசாரணையை வரும் ஏப்.27–க்கு தள்ளிவைத்து உத்தரவிட்டுள்ளார்.

இது ஒருபுறம் இருக்க தலைமறைவான சவுக்கு சங்கரை தனிப்படை அமைத்து சென்னை போலீஸார் தேடி வந்தனர். இந்நிலையில், அவர் ஆந்திர மாநிலத்தில் உள்ள லாட்ஜ் ஒன்றில் இருப்பதாக போலீஸாருக்கு தகவல் கிடைத்தது.

இதையடுத்து, நேற்று அங்கு விரைந்த சென்னை போலீஸார் சவுக்கு சங்கரை கைது செய்தனர். அவருடன் தங்கியிருந்த அவரது தோழி மாலதியும் கைது செய்யப்பட்டார்.

பின்னர் இருவரையும் போலீஸார் சென்னை அழைத்து வந்தனர். மாலதி மீதும் வழக்குகள் நிலுவையில் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# திருப்பரங்குன்றம் மலை அளவீடு?



மதுரை, ஏப். 09–

மதுரையை சேர்ந்த கே. கே.ரமேஷ் என்பவர் மதுரை ஐகோர்ட்டில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருந்ததாவது:–

திருப்பரங்குன்றம் மலை முழுவதையும் தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் கொண்டு வரும்படி மத்திய தொல்லியல் துறையினருக்கு உத்தரவிட வேண்டும் என்று மதுரை ஐகோர்ட்டில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு வழக்கு தொடர்ந்தேன். இந்த வழக்கை விசாரித்த நீதிபதி ஸ்ரீமதி, இந்த கோரிக்கை தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் புதிதாக மனு அளிக்க வேண்டும். அந்த மனுவை சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முறையாக பரிசீலித்து உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று உத்தரவிட்டார்.

அதன்படி அதிகாரிகளிடம், திருப்பரங்குன்றம் மலையை அளவீடு செய்து தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டில் கொண்டு வரும்படி புதிதாக மனு அளித்தேன். அந்த மனுவை பரிசீலித்து அதிகாரிகள் எந்த நடவடிக்கையையும் இதுவரை எடுக்கவில்லை. எனவே கோர்ட்டு உத்தரவை முறையாக பின்பற்றாத அதிகாரிகள் மீது கோர்ட்டு அவமதிப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அதில் கூறியிருந்தார்.

இந்த மனு நீதிபதிகள் ஜி.ஆர்.சுவாமிநாதன், ஸ்ரீமதி ஆகியோர் முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது மத்திய அரசின் சார்பில் உதவி சொலிசிட்டர் ஜெனரல் கோவிந்தன் ஆஜராகி, திருப்பரங்குன்றம் மலையை அளவீடு செய்தால் மட்டுமே தொல்லியல் துறையின் கட்டுப்பாட்டுக்கு கொண்டு வருவது பற்றி பரிசீலிக்க இயலும். மத்திய தொல்லியல்துறை அளவீடு செய்ய தயாராக உள்ளது. வருவாய் அதிகாரிகள் ஒத்துழைப்பு வழங்கவில்லை என்றார். இதை பதிவு செய்து கொண்ட நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவு வருமாறு:–

இந்த வழக்கில் மதுரை மாவட்ட கலெக்டரையும் ஒரு எதிர்மனுதாரராக சேர்க்கிறோம். அவர் மத்திய தொல்லியல் துறையுடன் சேர்ந்து திருப்பரங்குன்றம் மலையை அளவீடு செய்ய வேண்டும். இதற்கு வருவாய்த்துறையினர் போதிய ஒத்துழைப்பை வழங்கும்படியும் கலெக்டர் உத்தரவிட வேண்டும். இந்த நடவடிக்கையை அடுத்த மாதம் (மே மாதம்) முடிக்க வேண்டும். இவ்வாறு நீதிபதிகள் உத்தரவிட்டு விசாரணையை ஜூன் மாதத்துக்கு ஒத்தி வைத்தனர்.

# இந்தியாவும், அமெரிக்காவும் இணைந்து 'நிலவில் ஒரு தளத்தை அமைக்கத் தயாராகி வருகின்றன' - இஸ்ரோ விஞ்ஞானிகள்!

புதுடெல்லி, ஏப். 09–


அமெரிக்கா நாசாவின் ஆர்டெமிஸ்–2 மற்றும் இந்தியாவின் சந்திரயான்–3 ஆகிய இரண்டும் நிலவைப் புரிந்துகொள்வதற்கான முக்கிய படிகளாகும். ஆனால் அவற்றின் வழிமுறைகளும், நோக்கங்களும் முற்றிலும் வேறுபட்டவை. சந்திரயான்–3 நிலவின் மேற்பரப்பில் தரையிறங்கி மூவர்ணக் கொடியை ஏற்றிய அதே வேளையில், ஆர்டெமிஸ்–2 மனிதர்களை நிலவின் 'பின்பக்கத்திற்கு' அழைத்துச் சென்று ஒரு புதிய உலக சாதனையை படைத்துள்ளது.

ஆர்டெமிஸ்–2 மற்றும் சந்திரயான்–3 ஆகியவை விண்வெளிப் பந்தயத்தோடு நிலவை அடைவதோடு நின்றுவிடவில்லை. நிலவின் மிகவும் சவாலான பகுதிகளை யார் சிறப்பாக ஆராய்கிறார்கள் என்பதைப் பார்ப்பதற்கான போட்டியாக இது மாறியுள்ளது. உலகெங்கிலும் உள்ள பல நாடுகள் இந்தப் பந்தயத்தில் பங்கேற்றுள்ளன. ஆனால் இதுவரை இந்தியாவும், அமெரிக்காவும் மட்டுமே வெற்றி பெற்றுள்ளன. நாசாவின் ஆர்டெமிஸ்–2 விண்கலம் தற்போது நிலவின் மறுபக்கத்தை அடைந்து அதன் மீது பறந்தபோது, அது உலகமே பேசும் பொருளாக மாறியது. ஆனால், நாசாவிற்கு முன்பே, இந்தியாவின் இஸ்ரோ நிலவின் தென் துருவத்தில் தனது கொடியை நட்டது.

குறிப்பாக, இந்தியாவின் சந்திரயான்–3 கடந்த 2023–ம் ஆண்டு ஆகஸ்ட் 23–ந்தேதி நிலவின் தென் துருவத்திற்கு அருகில் தரையிறங்கியது. இது நிலவின் மிகக் குறைந்த சூரிய ஒளியைப் பெறும் பகுதியாகும். இங்குதான் நீர் (பனிக்கட்டி வடிவில்) இருப்பதற்கான வாய்ப்பு உள்ளது. இந்த கடினமான பகுதியில் மென்மையாக தரையிறங்கிய உலகின் முதல் நாடு இந்தியா ஆகும். இந்தியாவிற்கு முன்பு பல நாடுகள் இங்கு தரையிறங்க முயற்சித்தன. ஆனால் அனைத்தும் தோல்வியடைந்தன. நாசாவின் ஆர்டெமிஸ்–2 திட்டம் சற்று வித்தியாசமானது. இந்தத் திட்டம் நிலவின் மேற்பரப்பில் தரையிறங்காது. மாறாக மனிதர்களுடன் நிலவைச் சுற்றி வந்து திரும்பும். இந்த விண்கலத்தில் 4 விண்வெளி வீரர்களை ஏற்றிச் சென்று, நிலவு சுற்றுப்பாதையை நிறைவு செய்யும். பூமியிலிருந்து பார்க்க முடியாத நிலவின் பின்பகுதி வழியாக இந்த விண்கலம் கடந்து சென்றது

இந்த திட்டத்தின் சிறப்பு அம்சமாகும். இது பூமியிலிருந்து 4 லட்சத்து 6 ஆயிரத்து 773 கி.மீ. பயணித்து மிக நீண்ட தூரத்திற்கான சாதனையையும் படைத்தது. தென் துருவம் என்பது நிலவின் கீழ்ப்பகுதி (துருவம்) ஆகும். இங்குள்ள பள்ளங்கள் மிகவும் ஆழமானவை. வெப்பநிலை மைனஸ் 200 டிகிரி செல்சியஸ் வரை செல்லக்கூடும். சந்திரயான்–3 இந்தப் பகுதிக்குச் சென்றது. நிலவின் மறுபக்கம் 'இருண்ட பக்கம்' என்றும் அழைக்கப்பட்டாலும், அது முற்றிலும் இருண்டதல்ல. அது பூமியை எதிர்கொள்ள முடியாத ஒரு பகுதியாகும். ஆர்டெமிஸ்–2 விண்வெளி வீரர்கள் இந்த மர்மமான பகுதிக்கு மேலே பறந்துள்ளனர்.

இஸ்ரோவின் சந்திரயான்–3 முற்றிலும் ரோபோக்களால் இயக்கப்பட்ட ஒரு திட்டமாகும். இதில் மனிதர்கள் யாரும் பயணிக்கவில்லை. அதன் முக்கிய அங்கங்களாக இருந்த 'விக்ரம் லேண்டர்' மற்றும் 'பிரக்யான் ரோவர்' ஆகியவை நிலவின் மேற்பரப்பில் சோதனைகளை நடத்தின. அதே போல், நாசாவின் ஆர்டெமிஸ்–2 திட்டம் ஒரு குழுவினரைக் கொண்ட திட்டமாகும். 4 விண்வெளி வீரர்கள் ஒரு விண்கலத்தில் நிலவின் மறுபக்கத்திற்குப் பயணம் செய்தனர். மனிதர்கள் நீண்ட காலத்திற்கு நிலவில் வாழ்வதற்கு உதவும் உயிர் ஆதரவு அமைப்புகளைச் சோதிப்பதே இதன் நோக்கமாகும். சந்திரயான்–3, ஆர்டெமிஸ்–2 திட்டங்களுக்கான நிதி ஒதுக்கீட்டிலும் மிகப்பெரிய வேறுபாடு உள்ளது. குறிப்பாக சந்திரயான்–3 திட்டத்தை இந்திய அரசு ரூ.615 கோடியில் நிறைவேற்றியது. இது பல ஹாலிவுட் திரைப்படங்களின் பட்ஜெட்டை விடக் குறைவு. ஆனால் நாசாவின் ஆர்டெமிஸ்–2 திட்டத்திற்கு ரூ.34 ஆயிரம் கோடி செலவிடப்பட்டுள்ளது. இது இந்தியாவின் முழு சந்திரயான் திட்டத்தை விட 17 மடங்கு அதிக செலவாகும். சந்திரயான்–3 நிலவின் மண் மற்றும் அங்கு நீர் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் பற்றி நமக்குத் தெரிவித்தது. ஆனால், எதிர்காலத்தில் ஆர்டெமிஸ்–3 திட்டத்தின் மூலம் நிலவில் மனிதர்களைத் தரையிறக்கும்போது நாசா எதிர்கொள்ளும் சவால்களைப் புரிந்துகொள்ள இது உதவியது. நாசாவின் இந்தத் திட்டத்தின் நோக்கம், அதன் ஓரியன் விண்கலம் மற்றும் எஸ்.எல்.எஸ் ராக்கெட் ஆகியவை மனிதர்களுக்கு எவ்வளவு பாதுகாப்பானவை என்பதைச் சோதிப்பதாகும்.



விண்வெளிப் பந்தயத்தில் இந்தியா இனி ஒரு பார்வையாளராக மட்டும் இல்லை. இஸ்ரோவும் நாசாவும் இப்போது "ஆர்டெமிஸ் உடன்படிக்கைகளின்" கீழ் இணைந்து செயல்படுகின்றன. சந்திரயான் – 3 ல் இருந்து பெறப்பட்ட தரவுகளை நாசா பயன்படுத்தி வருகிறது.

எதிர்காலத்தில் இந்தியாவும் அமெரிக்காவும் இணைந்து நிலவில் ஒரு தளத்தை அமைக்கத் தயாராகி வருகின்றன என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்.




இஸ்மாயில் லக்கி டிராவல்ஸ்

127, T.P.K.ரோடு, மதுரை.

Ph: 98659 88882

மதுரை to சென்னை ரெகுலர் சர்வீஸ் பஸ் மற்றும் பார்சல் சர்வீஸ் உள்ளது

சென்னை Ph: 98659 88881


# வேலை வாய்ப்பு

## தேர்வு இல்லாமல் இந்திய கடற்படையில் வேலை..!

இந்திய கடற்படையின் கப்பல் பழுதுபார்க்கும் தளம் மற்றும் விமானத் தளங்களில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்புவதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

பணியிட விவரம்:

பிட்டர் (Fitter) பிரிவு 31,

கம்ப்யூட்டர் ஆபரேட்டர் 21,

எலக்ட்ரீசியன் (Electrician) பிரிவு 29,

எலக்ட்ரானிக் மெக்கானிக் 18,

இன்ஸ்ட்ரூமெண்ட் பிரிவு 15,

வெல்டர் (Welder) பிரிவு 14,

கல்வித்தகுதி: இந்த பணியிடங்களுக்கு விண்ணப்பிக்க விரும்பும் நபர்கள் கட்டாயமாக ஐ.டி.ஐ. (ITI) தகுதி பெற்றிருக்க வேண்டும்.

வயது வரம்பு: விண்ணப்பதாரர்களின் வயது 01.06.2026 தேதியின்படி குறைந்தபட்சம் 18 வயது மற்றும் அதிகபட்சம் 60 வயதுக்குள் இருக்க வேண்டும்.

தேர்வு செய்யப்படும் முறை: தகுதியான விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத் தேர்வு மூலம் தேர்வு செய்யப்படுவார்கள். விண்ணப்பிக்க விரும்புவோர் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் இருந்து விண்ணப்பப் படிவத்தை பதிவிறக்கம் செய்து, முழுமையாக பூர்த்தி செய்து அனுப்ப வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி: பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை "The Admiral Superintendent (for Officer–in–Charge ATS), Apprentices Training School, Naval Ship Repair Yard, Naval Base, Kochi 682 004" என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

கடைசி தேதி: இந்த வேலைவாய்ப்பிற்கு விண்ணப்பிக்க கடைசி தேதி 17.04.2026 என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஜே.இ.இ. மெயின் 2026: ஆன்சர் கீ வெளியீடு? ஏப்ரல் 20-ல் தேர்வு முடிவுகள்!


ஜேஇஇ மெயின் 2026 அமர்வு 2–க்கான முடிவுகள் ஏப்ரல் 20, 2026 அன்று தற்காலிகமாக வெளியிடத் திட்டமிடப்பட்டுள்ளது. முடிவுகளுடன் சேர்ந்து, இறுதித் தரவரிசைப் பட்டியலும் வெளியிடப்படும்

மாணவர்களின் வசதிக்காக என்.டி.ஏ (NTA) வெளியிட்டுள்ள கால அட்டவணையின்படி, தேர்வுப் பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகின்றன:

ஏப்ரல் 9: தேர்வர்கள் எழுதிய கேள்வித்தாள்கள் அதிகாரப்பூர்வ இணையதளத்தில் வெளியிடப்படும்.


ஏப்ரல் 11: தற்காலிக விடைக்குறிப்புகள் (Provisional Answer Key) வெளியிடப்படும். விடைக்குறிப்பில் ஏதேனும் ஆட்சேபனைகள் இருந்தால், மாணவர்கள் அன்றைய தினமே தங்களது புகார்களைத் தெரிவிக்கலாம்.

ஏப்ரல் 20: ஜே.இ.இ மெயின் இரண்டாம் கட்டத் தேர்வு முடிவுகள் அதிகாரப்பூர்வமாக வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



## சினிமா துளிகள்..!

### 2026 கேரள சட்டமன்ற தேர்தல்: வாக்களித்த சினிமா பிரபலங்கள்!



140 தொகுதிகளைக் கொண்ட கேரள மாநிலத்தில், ஆளும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு தலைமையிலான இடது முன்னணி மற்றும் காங்கிரஸ் தலைமையிலான ஐக்கிய ஜனநாயக முன்னணி, பா.ஜனதா தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணி இடையே போட்டி நிலவுகிறது. இங்கு தொடர்ந்து 3–வது முறையாக ஆட்சி பீடத்தில் அமர மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டும், மீண்டும் அதிகாரத்தை கைப்பற்ற காங்கிரசும் தீவிரம் காட்டுகின்றன. தேசிய ஜனநாயக கூட்டணியும் தனது பலத்தை காட்ட கோதாவில் உள்ளது. இங்கு பிரதான கட்சி வேட்பாளர்கள், சுயேச்சைகள் உள்பட 883 பேர் போட்டியிடுகின்றனர்.

இந்த நிலையில், காலை 7 மணி முதல் வாக்குப்பதிவு விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. அதில், நடிகர் மோகன்லால் மற்றும் சுரேஷ் கோபி ஆகியோர் மக்களுடன் வரிசையில் நின்று தங்களின் வாக்குகளை செலுத்தியுள்ளனர்.






# அனல் பறக்கும் தேர்தல் களம்..!



## அரசியலில் ஈடுபடுபவர், முழுநேரமும் ... விஜய் குறித்து பாஜக தேசியத் தலைவர் கருத்து!

புதுடெல்லி, ஏப். 09–

பாஜக தேசியத் தலைவர் நிதின் நபின் ஆங்கில நாளிதழுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது:–

தமிழ்நாடு மற்றும் மேற்குவங்காள சட்டமன்றத் தேர்தல் முடிவுகள் அனை வரையும் ஆச்சரியப்படுத்தும்; தமிழ்நாட்டில் ஒரு மாற்றம் வரப்போகிறது. அண்ணா மலைக்கு எங்கும் எந்த மனக்கசப்பும் இல்லை, அவர் தேர்தல் பிரசாரங்களில் கலந்துகொள்கிறார்.



விஜய் முதல்முறையாக அரசியலுக்கு வந்துள்ளார். அவருக்கு என் வாழ்த்துகள். கவர்ச்சி என்பது மக்களைத் திரட்டவும், ஒன்றிணைக்கவும் உதவும். ஆனால் அரசியலில் ஈடுபடுபவர், முழுநேரமும் அரசியலிலேயே தன்னை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டும். விஜய் களத்தில் எவ்வளவு நேரம் செலவிடுகிறார் என்பதைப் பொறுத்தே எல்லாம் அமைகிறது. விஜய் அரசியலில் இன்னும் பார்க்க வேண்டியது அதிகம் உள்ளது.



மரியநாதபுரம், தேவசகாய நகரில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி திண்டுக்கல் தொகுதி வேட்பாளர் மானமிகு. I.P. செந்தில் குமார் அவர்களை ஆதரித்து திராவிடர் கழகத் தலைவர், தமிழர் தலைவர், ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் பரப்புரை மேற்கொண்டார்.



நாமக்கல் மாவட்டம் ராசிபுரம் சட்டமன்றத் தொகுதியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் போட்டியிடும் திமுக வேட்பாளர் மா.மதிவேந்தனை ஆதரித்து கழகத் துணைப் பொதுச் செயலாளரும் மாநிலங்களவை உறுப்பினருமான திருச்சி சிவா அத்தனூர் பேரூராட்சியில் மக்களிடையே உரையாற்றி அரசின் நலத்திட்டங்களை எடுத்துக் கூறி வாக்குகளை சேகரித்தார்.



தேனி மாவட்டம் ஆண்டிபட்டி சட்டமன்ற தொகுதி தி.மு.க.வேட்பாளர் ஆ.மகாராஜன்எம்.எல்.ஏ.ஆண்டிபட்டி ஒன்றியத்தில் உள்ள தோப்பு பட்டி, பாலக்கோம்பை, ராமகிருஷ்ணாபுரம், அழகாபுரி, தெப்பம்பட்டி உள்பட 10க்கும் மேற்பட்ட கிராமங்களில் வாக்குசேகரித்தார். உடன் முன்னாள் ஒன்றிய நிர்வாகிகள் மற்றும் முன்னாள் ஒன்றிய கான்சிலர் செல்லத்துரை, மாவட்டமாணவரணி அமைப்பாளர் பிரகாஷ், ஒன்றிய அமைப்பாளர் அர்சுணன், எஸ்.டி.சிவா, சரவணன், உள்பட முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள், கிளை செயலாளர்கள் வாக்கு சேகரித்தனர். பெண்கள் ஆரத்தி எடுத்து மலர்தூவி வரவேற்றனர்.

## காரைக்குடியில் விஜய் பிரசாரம்: பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரம்!

காரைக்குடி, ஏப். 09–

தமிழக வெற்றிக்கழகத்தின் தலைவர் விஜய் தீவிர பிரசாரத்தில் ஈடுபட்டு வருகிறார். ஏப். 10 (வெள்ளிக்கிழமை) காரைக்குடி சட்டமன்ற தொகுதி வேட்பாளர் டாக்டர் டி.கே.பிரபு உள்பட மானாமதுரை, சிவகங்கை, திருப்பத்தூர் ஆகிய 4 தொகுதிகளின் த.வெ.க. வேட்பாளர்களை ஆதரித்து காரைக்குடியில் தேர்தல் பிரசாரம் மேற்கொள்ள உள்ளார்.




காரைக்குடி தேவர் சிலை அருகே பகல் 12 மணி முதல் மாலை 4 மணி வரை தேர்தல் பிரசார கூட்டத்திற்கு அனுமதி கேட்கப்பட்டு உள்ளது. இதையொட்டி தேர்தல் கமிஷன் அதிகாரிகள், போலீஸ் அதிகாரி கள் ஆலோசனை நடத்தினர். இதை தொடர்ந்து மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு சிவபிரசாத், காரைக்குடி உதவி போலீஸ் சூப்பிரண்டு ஆஷிஷ் புனியா மற்றும் அதிகாரிகள் குழுவினர் பிரசாரத்திற்கு அனுமதி கேட்கப் பட்ட தேவர் சிலை பகுதியில் ஆய்வு மேற்கொண்டனர்.

காரைக்குடி தொகுதி வேட்பாளர் டி. கே.பிரபுவிடம் பிரசார கூட்டத்திற்கான ஏற்பாடுகள் குறித்து ஆலோசனை நடத்தினர். சில நிபந்தனைகளுடன் விஜய்யின் பிரச்சார கூட்டத்திற்கு அனுமதி கிடைக்கும் என தமிழக வெற்றிக்கழக கழகத்தினர் தெரிவித்தனர்.

இந்த நிலையில், காரைக்குடியில் விஜய் நாளை பிரசாரம் மேற்கொள்ள உள்ள நிலையில், ரசிகர்கள் மற்றும் தொண்டர்கள் ஏறாமல் இருக்க டிரான்ஸ்பார்மர்கள், மின் கம்பங்கள், உயரமான மரங்களுக்கு பாதுகாப்பு தடுப்பு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் விஜய் பிரசாரத்திற்கான பாதுகாப்பு ஏற்பாடுகள் தீவிரமாக செய்யப்பட்டு வருகிறது.

## எனக்கு வாய்ப்பு தாருங்கள்... வேலைக்காரனாய் இருந்து பணி செய்வேன்: நடிகர் மன்சூர் அலிகான்!

லால்குடி, ஏப். 09–

திருச்சி மாவட்டம் லால்குடி தொகுதியில் போட்டியிடும் நடிகர் மன்சூர் அலிகான் தீவிர வாக்குசேகரிப்பில் ஈடுபட்டு வருகிறார். நேற்று கல்லக்குடி ஊரணியில் பெண்களின் துணியை துவைத்து கொடுத்து நடிகர் மன்சூர் அலிகான் தீவிர வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டார். அப்போது அவர் பேசியதாவது:–

என்னை வெற்றி பெற செய்தால் விவசாயிகளின் கனவான வாழை கொள்முதல் நிலையம், நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டு விவசாயிகளின் வாழ்வாதாரம் உயர்த்தப்படும். நான் ஒவ்வொரு முறையும் ஒவ்வொரு தொகுதியில்



நின்று வருகிறேன். நான் எப்பவும் கைக்காசை போட்டு நிப்பேன், இது எனக்குப் பழக்கமாயிடுச்சு

லால்குடி தொகுதி புண்ணிய பூமி, பாரம்பரி யமான பூமி. காமராஜர் முதல் பெரியார் வரை உள்ள தலைவர்கள் மாட்டு வண்டியில வந்து பிரசாரம் செய்த ஊர். 5 ஆண்டுகள், 10 ஆண்டுகள் என ஆட்சி செய்தவர்கள் தொகுதிக்கு ஒன்றும் செய்யாமல் பதவி சுகத்தை அனுபவித்துவிட்டு போய்விடுகிறார்கள். எனக்கு வாய்ப்பு தாருங்கள். அனைத்து சமூக மக்களின் வேலைக்காரனாய் இருந்து உங்களுக்கு பணியிடை செய்வேன். இவ்வாறு அவர் கூறினார்.



தேனி மாவட்டம் கம்பம் சட்டமன்ற தொகுதி தி.மு.க.வேட்பாளர் ராமகிருஷ்ணன் எம்.எல்.ஏவை ஆதரித்து, கம்பம் பகுதியில் மதசார்பற்ற கூட்டணியில் உள்ள திராவிட கழக பொதுசெயலாளர் கி.வீரமணி பிரச்சாரம் செய்தார். முன்னதாக தேனி தெற்கு மாவட்ட தி.மு.க.நிர்வாகிகள் வரவேற்பு அளித்தனர்.திராவிட கட்சி மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய நகர பொறுப்பாளர்கள் உடன் இருந்தனர்.

## கடன் வாங்குவதில் முதல் மாநிலம் தமிழ்நாடு - எடப்பாடி பழனிசாமி!

சென்னை, ஏப். 09–

சேப்பாக்கம் – திருவ ல்லிக்கேணி தொகுதியில் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி பிரசாரம் மேற்கொண்டார். அப்போது அவர் கூறியதாவது:



* போதை ஆசாமிகளால் கொலை, கொள்ளை பாலியல் வன்கொடுமை நடக்காத நாளே இல்லை என்ற நிலை உருவாகி உள்ளது.
* திமுகவின் 5 ஆண்டு கால ஆட்சியில் மூதாட்டிகள் வரை பெண்களுக்கு பாதுகாப்பில்லை.
* இரண்டரை வயது குழந்தையை கூட விட்டு வைக்கவில்லை, போதைப்பொருள் புழக்கத்தால் குற்றங்கள் அதிகரித்துள்ளது.
* தொலைக்காட்சிகளில் தங்கம், வெள்ளி நிலவரம் சொல்வதைப்போல் இன்றைய கொலை நிலவரம் சொல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.
* ஊழல் செய்வதில் தமிழ்நாடு முதல் மாநிலம், கடன் வாங்குவதில் திமுக சாதனை, ரூ.5 லட்சம் கோடி கடன் வாங்கி உள்ளனர்.
* திமுக ஆட்சியில் சொத்து வரி, மின் கட்டணம் உள்ளிட்டவை உயர்ந்துள்ளது.
* கொரோனா காலத்தில் வருமானம் இல்லாதபோதும் சிறப்பாக ஆட்சி செய்தோம்.
* திமுக ஆட்சியில் பல இடங்களில் அம்மா உணவகங்களை மூடி விட்டனர்.
* அம்மா உணவகங்களில் தரமற்ற உணவினை கொடுத்து தவறான பெயரை ஏற்படுத்த பார்க்கின்றனர்.
* அதிமுக ஆட்சி அமைந்த உடன் எனது நேரடி கட்டுப்பாட்டில் அம்மா உணவகங்கள் செயல்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

### நாமக்கல் அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரியில்

## 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தி தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சி நடைபெற்றது!

நாமக்கல், ஏப். 09–

கல்லூரி தேர்தல் விழிப்புணர்வு குழு, யூத் ரெட் கிராஸ், என்எஸ்எஸ் மற்றும் என்சிசி சார்பில் நடைபெற்ற




தேர்தல் விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு கல்லூரி முதல்வர் (பொ) ராஜேஸ்வரி தலைமை வகித்து, ஏப். 23ல் நடைபெற உள்ள சட்டசபை தேர்தலில் மாணவ மாணவியர் அனைவரும் தவறாது ஓட்டளிக்க வேண்டும் என வலியுறுத்தி னார். மோகனூர் வட்டாட்சியர் கோவிந்தசாமி, மாவட்ட தொடர்பு அலுவலர் ராஜேஷ்கண்ணன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டு, வாக்கு ரிமையின் முக்கியத்துவம் மற்றும் 100 சதவீத வாக்குப்பதிவின் அவசியம் குறித்து பேசினர்.

நிகழ்ச்சியில், மாவட்ட தேர்தல் விழிப்புணர்வு பாடலுக்கு கல்லூரி மாணவியர் நடனமாடி, வாக்குப்பதிவு குறித்த விழிப்புணர்வை பரப்பினர். மேலும், சைகை நடிப்பு நாடகத்தின் மூலம் மாணவர்கள் 100 சதவீத வாக்குப்பதிவின் அவசிய த்தை உணர்த்தினர்.

கல்லூரி வளாகத்தில் மாதிரி வாக்குச்சாவடி மையம் அமைக்கப்பட்டு, வாக்குச்சாவடி செயல்மு றைகள் மற்றும் வாக்குப்பதிவு இயந்திரங்களின் பயன்பாடு குறித்து விளக்கப்பட்டது. மாணவர்களுக்கான மாதிரி வாக்குப்பதிவும் நடத்தப்ப ட்டது. நந்த நிகழ்ச்சியில் திரளான பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவிகள் கலந்துகொண்டனர்.



தேனி மாவட்டம்போடி சட்டமன்ற தொகுதி தி.மு.க.வேட்பாளர் முன்னாள் முதலமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ.வை ஆதரித்து, மதசார்பற்ற முற்போக்கு கூட்டணியில் உள்ள திராவிட கழக பொதுசெயலாளர் கி.வீரமணி போடி தொகுதியில் பிரச்சாரம் செய்தார். உடன் தி.க.நிர்வாகிகள் மற்றும் தி.மு.க. ஒன்றிய செயலாளர்கள், நகர செயலாளர், முன்னாள் எம்.பி.ரவீந்திரநாத் ஆகியோர் உள்ளனர்.

## தமிழகம் முழுவதும் வேட்புமனுவை திரும்ப பெற கடைசி நாள்!

சென்னை, ஏப். 09–

தமிழகத்தில் வரும் 23–ந் தேதி சட்டமன்ற தேர்தலுக்கான வாக்குப்பதிவு நடைபெறுகிறது. இதற்கான வேட்புமனு தாக்கல் கடந்த மார்ச் 30–ந் தேதி தொடங்கியது. 4 நாட்கள்



விடுமுறையான நிலையில் 4 நாட்கள் வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. கடந்த 6–ந் தேதி வேட்புமனு தாக்கலுக்கான கடைசி நாளாகும்.

முதல் நாளான மார்ச் 30–ந் தேதி 573 வேட்புமனுக்களும், 2–ம் நாளான கடந்த 2–ந் தேதி 1,361 வேட்புமனுக்களும், 3–ம் நாளான 4–ந் தேதி 3,430 வேட்புமனுக்களும், கடைசி நாளான 6–ந் தேதி 7,599 வேட்புமனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன.

அனைத்து வேட்புமனுக்களையும் கடந்த 7–ந் தேதி அந்தந்த தொகுதிக்கான தேர்தல் நடத்தும் அதிகாரிகள் பரிசீலனை செய்தனர். இந்த பரிசீலனைக்கு பிறகுதான் எத்தனை வேட்புமனுக்கள் செல்லத்தக்கவை, எத்தனை வேட்புமனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன என்ற விவரம் தெரிய வரும். அதன்படி, 7,599 வேட்புமனுக்கள் பரிசீலனைக்குப் பிறகு 5,081 வேட்புமனுக்கள் ஏற்கப்பட்டதாகவும், 2,480 வேட்புமனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டதாகவும், 38 வேட்புமனுக்கள் திரும்பப் பெறப்பட்டதாகவும் தேர்தல் கமிஷன் அறிவித்துள்ளது.

இன்று வேட்புமனுக்களை திரும்பப் பெற கடைசி நாளாகும். மாற்று வேட்பாளராக வேட்புமனு தாக்கல் செய்தவர் நேரில் வந்தோ அல்லது அவரின் அங்கீகாரம் பெற்ற முகவர் மூலமாவோ வேட்புமனுவை திரும்பப் பெறலாம். இன்று காலை 11 மணியில் இருந்து 3 மணிக்குள் வேட்புமனுக்களை திரும்பப் பெற்றுக் கொள்ளலாம். அதன் பிறகு இறுதி பட்டியல் தயார் செய்து அறிவிக்கப்படும்.

இந்த வேட்பாளர் பட்டியலின் அடிப்படையில்தான் மின்னணு வாக்கு எந்திரத்தில் ஒட்டப்பட வேண்டிய வேட்பாளரின் வண்ணப் புகைப்படம் மற்றும் சின்னத்துடன் கூடிய தாள் (பேலட் பேப்பர்) அச்சிடப்படும்.

### நாமக்கல் மாவட்டத்தில் சட்டசபை தேர்தலில் 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தி

## குடிநீர் கேன்களில் விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் ஒட்டும் பணியை மாவட்ட ஆட்சியர் துவக்கி வைத்தார்!

நாமக்கல், ஏப். 09–

நாமக்கல் மாவட்டத்தில் சட்டசபை தேர்தலில் 100 சதவீதம் வாக்குப்பதிவை வலியுறுத்தி, குடிநீர் கேன்க ளில் விழிப்புணர்வு ஸ்டிக்க ர்கள் ஒட்டும் பணியை மாவட்ட ஆட்சியர் துவக்கி வைத்தார். தொடர்ந்து, 'மாவ ட்டம் முழுவதும் உள்ள அனைத்து குடிநீர் கேன்க ளின் நிறுவனங்களின் மூலம், பொதுமக்களுக்கு வினியோ கிக்கப்படும் குடிநீர் கேன்க ளில், தேர்தல் விழிப்புணர்வு ஸ்டிக்கர் ஒட்ட வேண்டும் என அவர் அறிவுறுத்தினார்.

பின்னர், ஓட்டல்கள், மளிகை கடைகள் ஆகிய வற்றில், பொதுமக்களுக்கு வழங்கப்படும் பில்களில் எனது வாக்கு விற்பனைக்கு அல்ல, தேர்தல் நாள் ஏப்., 23




ஆகிய வாசகங்கள் அடங்கிய முத்திரைகளை அச்சிட்டு வழங்கும் வகையில், ஓட்டல் மற்றும் மளிகை கடை உரிமையாளர்களுக்கு தேர்தல் விழிப்புணர்வு முத்திரைகள் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் உணவு பாதுகாப்பு நியமன அலுவலர் தங்க விக்னேஷ், ரெட்கிராஸ் ஒருங்கிணைப்பாளர் ராஜேஸ்கண்ணன், வணிகர் சங்க பிரதிநிதிகள், ஓட்டல் உரியமையாளர்கள் சங்க பிரதிநிதிகள் உள்பட பலர் பங்கேற்றனர்.

## கேப்டனுக்கு பக்கபலமாக இருந்த நடிகர் மீசை ராஜேந்திரன் தேமுதிகவில் இருந்து திடீர் விலகல்..!



தேமுதிக வரும் சட்டமன்ற தேர்தலில் திமுக கூட்டணியில் இணைந்து போட்டியிடுகிறது. இந்நிலையில், தேமுதிக–வின் முக்கிய நிர்வாகியான நடிகர் மீசை ராஜேந்திரன், கட்சியில் இருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

Printed by Dr.P.Pandiarajan, Printed at Raja Printers at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Published by Dr.P.Pandiarajan, at No.5, Namashivayam Nagar 2nd St, Duraisamy Nagar, Madurai -625 016. Editor: Dr.P.Pandiarajan. TN/WPP-143/SR/2018-2020